1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தேசிய நெடுஞ்சாலைகளாக ஆக்கும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்படும். அவர்கள் ஒப்புக்கொண்டால் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்கப்படும்.

ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலம்.

*588 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாரூர்–விஜயபுரத்தில் உள்ள "ஓடம் போக்கி" ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது திருவாரூரில் மிக அதிகமான போக்குவரத்து ஏற்பட்டிருக்கும் காரணத்தால் இனிமேலாவது அந்த "ஓடம்போக்கி" ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தை அகலப்படுத்தி அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த இடத்தில் அப்ரோச் ரோடு 20 அடி அகலந்தான் இருக்கிறது. மேற்கொண்டு அகலப்படுத்த சாத்தியம் இல்லை. இரு மருங்கிலும் கட்டடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களை அப்புறப்படுத்த வேண்டும். ஆகவே, தற்போது அந்தப் பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் கிடையாது.

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர்

*566 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக்கு தலைவர் நியமிக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

Tapioca Package Scheme at Killiyoor

*290 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there was any misappropriation in the Tapioca Package Scheme case in Killiyoor about 1969-70; and

(*b*) the stage at which the matter stands now?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ் . எவ்வளவு ரூபாய்க்குக் கையாடல் நடந்திருக்கிறது? மூன்று ஆண்டு காலமாகியும் இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலேயே இருப்பதற்குக் காரணம் என்ன? காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவர்கள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள செலவினங்களில் கையாடல் நடந்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: இந்தக் கையாடல் வழக்கில் சம்பந்தப்படாத ஒரு சிலரும் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதிலே சம்பந்தம் இல்லாதவர்களையும் ஸ்டேட்மென்ட் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சம்பந்தம் இல்லாதவர்களா இல்லையா என்பதைப் பற்றி நீதிபதி தீர்ப்புக்கூறவேண்டுமே தவிர, சம்பந்தம் உண்டு, இல்லை என்று நாம் இப்போது சொல்லுவதற்கில்லை.

டிராக்டர்கள் விற்பனை.

* 291 வினா—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டிலிருந்து தமிழ்நாடு விவசாய முன்னேற்றத்திற்கு அரசு சார்பில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலம் வரவழைத்து கொடுக்கும் வெளிநாட்டு டிராக்டர்களை வாங்குபவர்கள் அதிக லாபத்திற்கு வெளி மாநிலத்திற்கு விற்பனை செய்வது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?